**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**
************

**ஊடக அறிக்கை**

## “இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்” சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் புகைப்படக் கண்காட்சி

இந்திய அரசியலமைப்பு உருவாக்கம் என்ற தொனிப்பொருளிலான புகைப்படக் கண்காட்சி 2019 நவமபர் 26 ஆம் திகதியன்று இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ தரண்ஜித் சிங் சந்து அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு வருட நீட்சியுடனான இந்த கொண்டாட்டத்தினை இந்திய அரசியலமைப்பின் 70 ஆவது ஆண்டு நிறைவுடன் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த துணைத் தூதுவர் விநோத் கே ஜேக்கப், இந்திய அரசியலமைப்பு தினத்தின்(26 நவம்பர்) முக்கியத்துவம் குறித்து இங்கு சுட்டிக் காட்டியிருந்ததுடன் இந்திய ஜனநாயகத்துக்கு அடித்தளமிட்ட அரசியலமைப்பு உருவாக்கப்பட்டமை முதல் அதனை அங்கீகரித்தமை வரையிலும் விளக்கமளித்திருந்தார், அத்துடன் இந்தியாவின் ஜனநாயக பாரம்பரியங்கள் குறித்தும் இங்கு குறிப்பிட்டிருந்த துணைத்தூதுவர் வலுவான, ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற இந்தியாவிற்கான அடித்தளத்தை உருவாக்குவதில் அரசியலமைப்பின் முக்கியத்துவம் குறித்தும் தெரிவித்திருந்தார்.

இந்த புகைப்படக் கண்காட்சியில் அரசியலமைப்பு உருவாக்கம், அரசியலமைப்புச் சபையின் முதலாவது அமர்வு மற்றும் இந்திய அரசியலமைப்பின் தலைமை சிற்பி என அழைக்கப்படுபவரும் சுதந்திர இந்தியாவின் முதலாவது சட்டத்துறை அமைச்சருமான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் உள்ளடங்கலாக அதன் உறுப்பினர்கள் உள்ளிட்ட அரிதான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா நிலையத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்பு 07, ஆர்.ஜி.சேனாநாயக்கா மாவத்தை இலக்கம் 16/2 இல் அமைந்திருக்கும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் இந்த கண்காட்சி நவம்பர் 26 முதல் 28 ஆம் திகதி வரை பொதுமக்களுக்காக திறக்கப்பட்டிருக்கும்.

*****

கொழும்பு
26 நவம்பர் 2019